வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 84 of 2017

வழக்கு சாட்சி - PW -4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. வேல்முருகன் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | நேரு | வயது | : | |
| கிராமம் | : | | | | |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 02.09.2025.

(எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :** **நாள் : 02.09.2025.**

1)நான் தற்போது ஈரோடு மாவட்டம் தாளவாடி காவல்நிலையத்தில் காவல்ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.02.2017 ம் தேதி திருப்பூர் மாவட்டம் மங்கலம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாராக பணியில் இருந்த போது கூடுதல் பொறுப்பாளராக அவினாசிபாளையம் காவல் நிலையத்தில் பொறுப்பு ஆய்வாராக பணியில் இருந்தபோது, உதவி ஆய்வாளர் முனியப்பன் என்பவரால் அவினாசி பாளைய காவல் நிலைய குற்ற எண். 47/2017 சட்டப்பிரிவு 279,304(A)(2 எண்ணிக்கை) இத.ச வழக்கினை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே காலை 7.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சரவணன் மற்றும் தங்கவேல் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **அந்த மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ 3.** பின்னர் சம்பவ இட சாட்சிகள் சக்திவேல்,அருண்குமார், முத்துலட்சுமி, மோகன்ராஜ், மாடசாமி, சாட்சி நாகராணி, கவியரசன், அபிநவ், சேகர், சரவணன் மற்றும் தங்கவேல் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் திருப்பூர் அரசு மருத்துவமனை சென்று வழக்கில் இறந்துபோன சண்முகம், என்பவர் பிரேதத்தின் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார் முன்னிலையில் காலை 9.00 மணிமுதல் 10.30 மணிவரை பிரேத விசாரணை செய்து அறிக்கை தயார் செய்தேன். **அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ 4. ஆகும்.**

2)இறந்துபோன ஆனந்த், என்பவர் பிரேதத்தின் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார் முன்னிலையில் காலை 10.30 மணிமுதல் 12.00 மணிவரை பிரேத விசாரணை செய்து அறிக்கை தயார் செய்தேன். **அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ 5.** ஆகும். சாட்சிகள் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவினாசிபாளைய காவல் ஆய்வாளர் திரு. கதிர்வேல் அவர்கள் வசம் வழக்கு கோப்பைகளை ஒப்படைத்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

3)இந்த வழக்கில் கண்ணுற்ற சாட்சியாக காட்டப்பட்டுள்ள சேகர் என்பவர் சம்பவ இடத்திற்கு எந்த இருசக்கர வாகனத்தில் சென்றார் என்ற விவரத்தினை தெரிந்துக்கொண்டேன்னா என்றால் பதிவு எண் தெரியாது. விபத்தானது எப்படி ஆனது விபத்து வாகனங்கள் நேருக்கு நேர் மோதியதாக அல்ல பக்கவாட்டில் மோதியதா என்ற விபரம் எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடமான லோகநாதன் பெட்ரோல் பங்கில் வேலை செய்த யாரையும் இந்த வழக்கில் நான் இந்த வழக்கில் விசாரிக்கவில்லை என்றால் விசாரித்தேன் யாரும் முன்வரவில்லை. சி.சி.டி.வி. கேமராவில் நான் கைப்பற்றி நான் இவ்வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சி.சி,டிவி கேமரா பதிவுகளை தாக்கல் செய்தால் வழக்கின் உண்மைகள் தெரியவரும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் சொன்ன விதத்தில் புகார்மனு பெறப்படவில்லை என்றும், வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. பார்வை மகசர் மற்றும் வரைபடம் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்காவணங்கள் காவல்நிலையத்தில் வைத்து பின் ஆலோசனை செய்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்குக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2025.09.02 18:39:15 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.